நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**பாசிக் நிறுவனத்தில் உர விநியோகம் செய்யாததைக் கண்டித்து போராட்டம்**

First Published : 26 Oct 2010 08:59:09 AM IST

காரைக்கால், அக். 25: புதுவை அரசு நிறுவனமான பாசிக் மூலம் விவசாயிகளுக்கான உரம் விநியோகம் செய்யப்படாததைக் கண்டித்து போராட்டம் நடத்தவுள்ளதாக திருநள்ளாறு தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் பி.ஆர். சிவா தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர்களிடம் கூறியது:

காவிரியில் தண்ணீர் வராதது உள்ளிட்ட பல காரணங்களால் காரைக்காலில் விவசாயம் செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. காரைக்கால் மாவட்டத்தில் திருநள்ளாறு, நெடுங்காடு உள்ளிட்ட சில பகுதிகளில் ஆழ்குழாய் கிணறு மூலம் விவசாயத்தை தொடங்கினர். சில பகுதிகளில் அண்மையில் வந்த காவிரித் தண்ணீரைக் கொண்டு சம்பா பயிரிட்டுள்ளனர்.

நடவுப் பணிகள் அனைத்தும் முடிந்த நிலையில் விவசாயத்துக்குத் தேவையான அடி உரம் புதுவை அரசு நிறுவனமான பாசிக் மூலம் இதுவரை சரியான முறையில் வழங்கப்படவில்லை. காரைக்கால் மாவட்டத்தில் உள்ள பாசிக் மையங்கள், உழவர் உதவியகங்களால் விவசாயிகளுக்கு உரிய பயன் கிடைக்கவில்லை.

ஒருசில நாள்களில் காரைக்காலுக்கு 250 டன் உரம் அனுப்பிவைக்கப்படுமென முதலமைச்சர் தெரிவித்தும், இதுவரை உரம் வந்துசேரவில்லை. மாவட்டத்தில் சுமார் 20 சதவீதம் மட்டுமே விவசாயம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மீதமுள்ள நிலங்கள் காய்ந்து கிடக்கின்றன. தண்ணீர் தொடர்ந்து வராததாலும், புதுவை அரசு விதை, உரம் உள்ளிட்டவற்றை எவ்வாறு தரப்போகிறதோ என்ற சந்தேகம் கொண்ட விவசாயிகள், பயிர் செய்வதை விட்டுவிட்டனர். காரைக்காலில் பொதுவாகவே விவசாயம் சீரழிந்துவிட்டது. இதற்கு புதுவை அரசின் வேளாண் துறையின் செயலற்றத் தன்மையே முக்கிய காரணம்.

விவசாயத்துக்கென்றே உருவாக்கப்பட்ட பாசிக் நிறுவனம் மதுபானம், ஜவுளி வியாபார மையமாக மாற்றப்பட்டுவிட்டது. இதனால், பாசிக்குக்கு விவசாயத்துக்காக ஒதுக்கப்படும் நிதி, வேறு பயன்பாட்டுக்கு திருப்பிவிடப்படுவதால், விவசாயப் பொருள்களை ஹவாங்கி தரவேண்டும் என்ற எண்ணம் அந்தத் துறைக்கு இல்லாமல் போய்விட்டது.

இதற்கு புதுவை அரசுதான் முழு பொறுப்பு. எனவே, ஒட்டுமொத்த வேளாண் துறையின் செயலற்றப் போக்கைக் கண்டித்து விவசாயிகளைத் திரட்டி போராட்டம் நடத்தப்படும் என்றார் சிவா.

**அக். 29-ல் விவசாயிகள் குறை தீர் நாள் கூட்டம்**

First Published : 26 Oct 2010 08:54:24 AM IST

திருச்சி, அக். 25: திருச்சியில் அக். 29-ம் தேதி விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடைபெறவுள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் மகேசன் காசிராஜன் தெரிவித்திருப்பது:

"திருச்சி மாவட்டத்தில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் அக். 29-ம் தேதி காலை 10.30 மணிக்கு மாவட்ட ஆட்சியரகக் கூட்ட மன்றத்தில் நடைபெறவுள்ளது.

கூட்டத்தில் விவசாயிகள், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு நீர்ப் பாசனம், வேளாண் இடுபொருள்கள், வேளாண்மை சம்பந்தப்பட்ட கடனுதவிகள், விவசாய மேம்பாட்டுக்கான நலத் திட்டங்கள், வேளாண்மை தொடர்புடைய கடனுதவிகள் ஆகியவை குறித்து நேரிலோ, மனுக்கள் மூலமாகவோ தெரிவிக்கலாம்' என்றார் அவர்.

**உயிர் உரங்கள் விழிப்புணர்வு முகாம்**

First Published : 25 Oct 2010 10:19:09 AM IST

இதைத் தொடர்ந்து, உயிர் உரங்கள் விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. இதில், உயிர் உரங்களின் பயன்பாடு, நுண் சத்துகள், அவற்றின் குறைபாடுகளை நிவர்த்தி செய்தல் குறித்து, வேளாண் உதவி இயக்குநர்கள் துரை, ராதாமணி, துணை வேளாண் அலுவலர் கண்ணுசாமி ஆகியோர் விளக்கினர்.

போக்குவரத்து நெரிசல்: வட்டச் சாலை அமைக்க மனு

நாமக்கல், அக். 24: நாமக்கல் நகர போக்குவரத்து நெரிசலுக்குத் தீர்வு காண வட்டச் சாலை அமைக்கக் கோரி தமிழக சட்டப்பேரவை உறுதிமொழிக் குழுவிடம் காங்கிரஸ் கட்சியினர் மனு அளித்தனர்.

தமிழக சட்டப்பேரவையின் உறுதிமொழிக் குழுத் தலைவர் பீட்டர் அல்போன்ஸ் தலைமையிலான குழுவினர் புதன்கிழமை நாமக்கல் மாவட்டத்தின் பல்வேறு இடங்களைப் பார்வையிட்டு ஆய்வு செய்தது.

நாமக்கல் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி துணைத் தலைவர்கள் கோஸ்டல் பீட்ஸ் இளங்கோ, தெய்வசிகாமணி, வழக்கறிஞர் சுந்தரம், மாவட்ட இளைஞர் காங்கிரஸ் முன்னாள் தலைவர் எம்.

குமரன், இளைஞர் காங்கிரஸ் துணைத் தலைவர் செல்வகுமார், வாசு சீனிவாசன் ஆகியோர் பீட்டர் அல்போன்ஸிடம் கோரிக்கை மனு அளித்தனர்.

அதில் வாகனப் பெருக்கம், குறுகலான சாலை, கனரக வாகனங்களின் வருகை, நகரின் மத்தியில் பேருந்து நிலையம், மக்கள் நெருக்கம் என பல்வேறு காரணங்களால்
தினமும் நெரிசல் அதிகரித்து வருகிறது.

எனவே இதற்குத் தீர்வு காண வட்டச் சாலை அமைக்க தமிழக அரசுக்கு பரிந்துரை செய்ய வேண்டும் என அந்த மனுவில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

**"புதிய தொழில்நுட்பங்களை கையாள விவசாயிகள் முன்வர வேண்டும்**

First Published : 25 Oct 2010 10:18:55 AM IST

திருச்செங்கோடு, அக். 24: விவசாயிகள் புதிய தொழில்நுட்ப முறைகளைக் கடைப்பிடிக்க முன்வர வேண்டும் என்று திருச்செங்கோடு ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் தமிழரசு கூறினார்.

திருச்செங்கோடு அருகேயுள்ள இறையமங்கலம் கிராமத்தில், ராஜராஜன் 1000 நெல் சாகுபடி தொடர்பான விழிப்புணர்வு முகாம் வெள்ளிக்கிழமை நடந்தது. முகாமைத் துவக்கி வைத்து அவர் பேசியது:

காலத்திற்கு ஏற்ற வகையில் புதுமையான தொழில்நுட்பங்களை விவசாயத்தில் புகுத்த வேண்டியது அவசியம். ராஜராஜன் 1000 நெல் சாகுபடி முறையைப் பின்பற்றினால், இரட்டிப்பு மகசூல் கிடைக்கும். குறுகிய காலத்தில், குறைந்த தண்ணீரைப் பயன்படுத்தி கூடுதல் மகசூல் பெறலாம்.

விவசாயிகள், நவீனத் தொழில் நுட்பங்களையும், கருவிகளையும் பயன்படுத்துவதால், உழவுப் பணிகளுக்கு குறைந்த எண்ணிக்கையிலான ஆள்களே போதும். எனவே பழைய சாகுபடி முறைகளைக் கைவிட்டு, நவீனத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்த விவசாயிகள் முன்வர வேண்டும் என்றார்.

துணை வேளாண் அலுவலர் கண்ணுசாமி வரவேற்றார். நாமக்கல் மாவட்ட வேளாண் இணை இயக்குனர் சிவராஜ், ராஜராஜன் 1000 சாகுபடி முறைகள் குறித்து விளக்கினார்.

துணை வேளாண் இயக்குனர் பிரபாகரன், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு குறித்து பேசினார். வேளாண் துணை இயக்குனர் நடராஜன், தொழில் நுட்பங்கள் குறித்து விளக்கினார். வேளாண் உதவி இயக்குனர் (பொறுப்பு) ராதாமணி நன்றி கூறினார். ஏற்பாடுகளை, உதவி வேளாண் அலுவலர்கள் கிருஷ்ணமூர்த்தி, சிவகுமார், சண்முகராஜா செய்திருந்தனர்.

108 ஏக்கரில் சொட்டு நீர்ப் பாசனம்

பா.சுஜித்குமார்

First Published : 25 Oct 2010 02:10:13 PM IST

திருவண்ணாமலை, அக். 24: கூட்டுறவுத் துறையின் முயற்சியால் சொரகொளத்தூர் கிராமத்தில் 108 ஏக்கர் நிலத்தில் சொட்டுநீர்ப் பாசன முறை அமைக்கப்பட்டுள்ளது. இதனால், குறைந்த செலவில் அதிக மகசூல் கிடைப்பதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

தஞ்சாவூர், காஞ்சிபுரம் மாவட்டங்களுக்கு அடுத்து, திருவண்ணாமலையில்தான் நெல், கரும்பு, மணிலா பயிர்கள் அதிகளவில் சாகுபடி செய்யப்படுகின்றன.

இந்நிலையில் கடந்த சில ஆண்டுகளாக திருவண்ணாமலை மாவட்டத்தில் பருவமழை பொய்த்து வருகிறது. வழக்கமான மழை அளவைக் காட்டிலும், 40 சதவீதம் மழை பெய்யவில்லை. நடப்பாண்டு 1,15,000 ஹெக்டேரில் நெல்லும், 32,900 ஹெக்டேரில் தானியங்களும், 33,100 ஹெக்டேரில் பயறு வகைகளையும், 1,29,200 ஹெக்டேரில் எண்ணெய் வித்துக்களும், 26,000 ஹெக்டேரில் கரும்பையும் சாகுபடி செய்ய திட்டமிட்டுள்ளனர். ஆனால், பருவ மழை குறைந்து வருவதால் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து விட்டது.

குறைந்த நீரில் அதிக உற்பத்தி தரும் சொட்டுநீர் பாசனம்

இதைக் கருத்தில் கொண்டு வேளாண்மை மற்றும் கூட்டுறவு துறைகள் சார்பில் குறைந்த நீரைக் கொண்டு அதிக வேளாண் உற்பத்தியை ஈட்டக் கூடிய வகையில் சொட்டு நீர்ப்பாசன முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இம்முறைக்கு 65 சதவீதம் மானியமும், 35 சதவீதம் வங்கிக் கடனும் தரப்படுகின்றன. இதற்காக விவசாயிகளிடையே விழிப்புணர்வு நடத்தப்படுகிறது.

இந்நிலையில், சொரகொளத்தூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் சார்பில் சொரகொளத்தூர், வெளுகனந்தல் கிராமங்களில் சொட்டுநீர்ப்பாசன முறை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இதையடுத்து, இரு கிராமங்களைச் சேர்ந்த 38 விவசாயிகள் தங்களுக்குச் சொந்தமான 108 ஏக்கர் நிலத்தில் சொட்டுநீர்ப்பாசன முறையை அமைத்துள்ளனர்.

இதுதொடர்பாக வெளுகனந்தல் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி ஏழுமலை கூறியது:

எனக்கு சொந்தமான 2.4 ஏக்கர் நிலத்தில் சொட்டுநீர்ப்பாசனம் அமைக்க மானியத் தொகை |34,600 பெற்றேன். மீதித் தொகை 12 சதவீத வட்டியுடன் வங்கியில் கடனாக பெற்றேன். ஆழ்துளை கிணறு, சொட்டுநீர்ப்பாசன முறை அமைத்ததால் 60 நாள்களில் மகசூல் தரக்கூடிய தர்ப்பூசணி செடிகளை சாகுபடி செய்தேன். இவற்றை விற்றதன் மூலம் செலவீனங்களும் போக |28

ஆயிரம் வரை வருவாய் கிட்டியது. மாத தவணையாக |1134 எளிதாக செலுத்தி வருகிறேன் என்றார்.

சொரகொளத்தூர் தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்க தனி அலுவலர் சி.மீனாட்சி சுந்தரம் கூறியது: விவசாய கூட்டுப் பொறுப்புக் குழுக்களைச் சேர்ந்த 9 பேருக்கு நுண்ணிய சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க |3.28 லட்சம் கடன் தந்துள்ளோம். விரைவில் வடகருங்கலாம்பாடி, காரியந்தல், பொற்குணம் கிராமங்களிலும் சொட்டுநீர்ப்பாசன முறையை அறிமுகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

கூட்டுறவு துணைப்பதிவாளர் (பயிற்சி) திருப்பதி கூறியது: கூட்டுறவுத் துறை மூலம் நவீன தொழில்நுட்பம், குறைந்த வாடகையில் விவசாய உபகரணங்கள் தருதல் உள்ளிட்ட பணிகளை செய்து வருகிறோம். சொட்டுநீர்ப்பாசன முறையை மேலும் அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம் என்றார்.

தினமலர்

**சென்னைக்கு காய்கறி வரத்து அதிகரிக்க சிறப்பு திட்டம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 26,2010,01:13 IST

சென்னை : சென்னைக்கு காய்கறி வரத்தை அதிகரிக்கும் நோக்கில், சிறு குறு விவசாயிகளை பயிரிட ஊக்குவிக்கும் சிறப்பு திட்டத்தை தமிழக அரசு அமல்படுத்த உள்ளது.தேசிய தோட்டக்கலை மேம்பாட்டு மையம் சில மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது. இதன்படி, அங்கு பசுமை குடில்களை ஏற்படுத்தி தந்து, சிறு குறு விவசாயிகளுக்கு நான்கு லட்ச ரூபாய்க்கு மேல் மானியம் வழங்கப்படுகிறது. இவற்றில் பெரும்பாலும், மலைப்பகுதி மேம்பாட்டு திட்டம், மேற்கு தொடர்ச்சி மலை மேம்பாட்டு திட்டம் போன்றவை பயன்படுத்தப்படுகின்றன.தற்போது சென்னைக்கு காய்கறி வரத்தை அதிகரிக்க செய்யும் நோக்கில் இதேபோன்ற திட்டத்தை, சென்னையை சுற்றியுள்ள பகுதிகளில் செயல்படுத்த தமிழக அரசு திட்டமிட்டுள்ளது. இதன்படி, சென்னை அருகிலுள்ள காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் சிறு குறு விவசாயிகளுக்கு, பசுமை குடில் சாகுபடி முறையை ஏற்படுத்தித்தர திட்டமிடப்பட்டுள்ளது.

விவசாயிகள், காய்கறிகளை பயிரிட்டு அதிக வருமானம் பெறவும், தரமான காய்கறிகளை சாகுபடி செய்யவும், இதற்கு தேவையான தரமான விதைகளை வழங்கவும் தமிழக அரசு திட்டமிட்டுள்ளது.

பசுமை குடில் அமைத்து தருவதால், பூச்சிகள் தாக்கும் பாதிப்பு இருக்காது. உயிரி உரங்கள் பயன்படுத்தப்படும். சொட்டுநீர் பாசன முறை ஊக்குவிக்கப்படும்.இத்திட்டத்தின்படி, விவசாயிகள் பசுமை குடில் அமைக்கவும், தரமான விதைகள் வழங்கவும் அரசு உதவும்.

இதற்காக, தன்னார்வ நிறுவனங்களை பயன்படுத்தவும் திட்டம் உள்ளது. விளைச்சலாகும் காய்கறிகளை, விவசாயிகள் விற்பதற்கு மையங்கள் ஏற்படுத்தவும், இடைத்தரகர்களை தவிர்க்கவும் இத்திட்டத்தில் வழிவகை காணப்படும்.சென்னையை மையமாக வைத்து துவக்கப்படும் இத்திட்டத்தை தொடர்ந்து, மற்ற நகரங்களுக்கும் காய்கறி வரத்தை அதிகரிக்கும் வகையில், அந்த பகுதிகளை சுற்றி திட்டங்கள் விரிவுபடுத்தப்பட உள்ளதாக, வேளாண்மைத் துறை செயலர் ராமமோகன ராவ் தெரிவித்தார்.

**தமிழக விவசாயிகள் சங்கம் முடிவு:மரவள்ளி கிழங்கு விலை உயர்த்த கோரி நவ.,10ல் ஆர்ப்பாட்டம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 26,2010,02:27 IST

சேலம்: "மரவள்ளி கிழங்கு மூட்டைக்கு 750 ரூபாய் வழங்க வேண்டும். மாவு பூச்சி தாக்குதலில் இருந்து பயிர்களை காத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும்' என, கோரி நவம்பர் 10ல் சேலம் சேகோசர்வ் முன் ஆர்ப்பாட்டம் நடத்த விவசாயிகள் சங்கம் முடிவு செய்துள்ளது.தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் ஆத்தூரியில் மரவள்ளி கிழங்கு பாதுகாப்பு சிறப்பு மாநாடு மாவட்ட தலைவர் ராஜகோபால் தலைமையில் நடந்தது. மாநில பொதுச்செயலாளர் சண்முகம், சேலம் மாவட்ட செயலாளர் தங்கவேலு, மாநில துணை செயலாளர் பழனிசாமி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:தமிழகத்தில் சேலம், நாமக்கல், ஈரோடு, கோயமுத்தூர், கரூர், திருச்சி, திண்டுக்கல், தேனி, மதுரை, தஞ்சாவூர், புதுக்கோட்டை, பெரம்பலூர், விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை, வேலூர், தர்மபுரி, கிருஷ்ணகிரி உள்ளிட்ட 18 மாவட்டங்களில் மரவள்ளி கிழங்கு சாகுபடி செய்யப்படுகிறது.

இப்பகுதிகளில் தற்போது அறுவடை நடந்து வருகிறது. கடந்த ஆண்டு இந்த காலகட்டத்தில் மூட்டைக்கு 750 ரூபாய் வரையும், ஸ்டார்ச் மூட்டைக்கு 3,000 ரூபாய் வரையும், ஜவ்வரிசி மூட்டைக்கு 5,000 ரூபாய் வரை கிடைத்தது. கடந்த ஆண்டு தாய்லாந்து நாட்டில் இருந்து மூன்று லட்சம் ஜவ்வரிசி மூட்டைகள் இறக்குமதி செய்யப்பட்டது.ஆனால், தற்போது மாவுபூச்சி நோய்

தாக்குதலால் தாய்லாந்து நாட்டில் மரவள்ளி உற்பத்தி வெகுவாக குறைந்து விட்டது. இதன் காரணமாக அந்நாட்டில் ஸ்டார்ச், ஜவ்வரிசியின் விலை பல மடங்கு உயர்ந்து விட்டது.

இதனால் தமிழகத்திலும் விலை அதிகரிப்பு ஏற்பட்டு இருக்க வேண்டும். ஆனால், தமிழகத்தில் மரவள்ளி கிழங்கு விலையோ மூட்டை 400 ரூபாய்க்கு என வீழ்ச்சி அடைந்து விட்டது. ஸ்டார்ச் மூட்டை 2,000 ரூபாய்க்கும், ஜவ்வரிசி மூட்டை 3,000 ரூபாய்க்கும் குறைவாக விற்கிறது.எனவே, விவசாயிகளின் நலன் கருதி கடந்த ஆண்டு கிடைத்த விலைக்கு குறையாமல் மூட்டை 750 ரூபாய்க்கு குறையாமல் கொள்முதல் விலை கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.மரவள்ளி கிழங்கின் விலையை மத்திய அரசே நிர்ணயம் செய்ய வேண்டும். மாநில அரசு மாவுச் சத்து கண்டறியும் கருவிகளை முக்கிய இடங்களில் அமைத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பரவி வரும் மாவுப்பூச்சி நோயை தடுத்திட உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். மாவுப்பூச்சி கொல்லி மருந்துகளை விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கிட வேண்டும்.இடைத்தரகர்களின் கொள்ளையை தடுத்திட வேண்டும். சேலம் சேகோ சர்வ் மூலம் மட்டுமே ஜவ்வரிசி விற்பனையை உறுதி படுத்திட வேண்டும். பெரும் ஆலை முதலாளிகள், வியாபாரிகள் மூலம் வரி செலுத்தாமல் செய்யும் ஜவ்வரிசி வியாபாரத்தை தடை செய்திட வேண்டும்.

கள்ள மார்க்கெட்டில் விற்பனை செய்பவர்கள் மீது கிரிமினல் வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த கோரிக்கைகளை வலியுறுத்தி வரும் நவம்பர் 10ல் சேலம் சேகோ சர்வ் முன் ஆர்ப்பாட்டம் நடைபெறும். இந்த ஆர்ப்பாட்டத்தில் விவசாயிகள் பெரும் திரளாக கலந்து கொள்ள வேண்டும் என்பது உட்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**உரித்த தேங்காய் கொள்முதல்: எம்.பி.,**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 26,2010,02:11 IST

சென்னிமலை: ""உரித்த தேங்காயை அரசு நேரடியாக கொள்முதல் செய்யவுள்ளது,'' என, தி.மு.க., விவசாய அணி செயலாளர் எம்.பி., கே.பி.ராமலிங்கம் பேசினார். தமிழ்நாடு தென்னை விவசாயிகள் நலவாரியத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள முன்னாள் எம்.எல்.ஏ., ராஜ்குமார் மன்றாடியாருக்கு, சென்னிமலை 10வது வார்டு தி.மு.க., சார்பாக நடந்த பாராட்டு விழாவில், அவர் பேசியதாவது: தென்னை விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்க, தமிழக அரசு கொப்பரை கொள்முதல் செய்கிறது. இனி, உரித்த தேங்காயை கொள்முதல் செய்யவுள்ளது.

இதற்காக 20 நேரடி கொள்முதல் நிலையங்கள் உருவாக்கப்பட உள்ளன. தோட்டக்கலைத் துறைக்கு தனி பல்கலைக்கழகம் அமைக்கும் திட்டம், விவசாயிகளுக்கு முழு மானியத்துடன்

தென்னங்கன்று வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளது.தமிழக அரசு செயல்படுத்தி வரும் வேளாண் திட்டத்தைதான், மற்ற மாநிலங்கள் தேர்தல் அறிக்கையாக கொடுக்கின்றன. தி.மு.க., இருக்கும் வரை யாரும் இலவச மின்சாரம் மீது கை வைக்க முடியாது. இவ்வாறு அவர் பேசினார்.

சென்னிமலை டவுன் பஞ்சாயத்து முன்னாள் தலைவர் நடேசன் தலைமை வகித்தார். ஒன்றிய செயலாளர் செங்கோட்டையன் வரவேற்றார். தென்னை நலவாரியத் தலைவர் ராஜ்குமார் மன்றாடியார் ஏற்புரை வழங்கினார். காங்கேயம் எம்.எல்.ஏ., விடியல் சேகர், மாவட்ட தி.மு.க., துணை பொறுப்பாளர் சச்சிதானந்தம், தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் நலவாரியத் தலைவர் செல்லமுத்து தமிழக விவசாயிகள் சங்கத் தலைவர் ரத்தினசாமி உள்பட பலர் பேசினர். விழா ஏற்பாடுகளை 10வது வார்டு செயலாளர் துரைசாமி உள்பட தி.மு.க.,வினர் செய்திருந்தனர்

**மழை பெய்யாததால் பயிர்கள் கருகும் அபாயம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 26,2010,02:02 IST

பொங்கலூர்: வழக்கமாக, அக்டோபரில் பெய்யும் சராசரி மழையளவை விட, மிகவும் குறைந்த அளவே தற்போது பெய்துள்ளது. இதனால், பல ஆயிரம் ஏக்கரில் சாகுபடி செய்யப் பட்டுள்ள பயிர்கள் கருகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இம்மாத துவக்கத்தில் 53 மி.மீ., மழை பெய்தது. இது, விதைப்பு பணிக்கு போதுமானதாக இருந்தது. இம்மழையை நம்பி சோளம், கம்பு, தட்டை, மக்காச் சோளம், கொள்ளு போன்றவற்றை விவசாயிகள் பயிர் செய்திருந்தனர். கடந்த 20 நாட்களாக மழை பெய்யாத தால், சாகுபடி செய்திருந்த பயிர்கள் கருக ஆரம்பித்துள்ளன. பொங்கலூர் வட்டாரத்தில் அக்டோபர் மாத சராசரி மழையளவு 172 மி.மீ., ஆனால், இம்மாதத்தில் வழக்கத்தை விட மழையளவு மிகவும் குறைந்துள்ளது, விவசாயிகளை கவலை அடையச் செய்துள்ளது. கடந்த 30 ஆண்டுகளில், 92ல் மட்டும் மிகக்குறைந்த அளவாக 22 மி.மீ., மழை பெய்தது. இதனால், அந்தாண்டில் நூற்றுக்கணக்கான ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த பயிர்கள் கருகி விவசாயிகளுக்கு பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தியது. அதுபோன்ற நிலை இந்தாண்டும் ஏற்பட்டு விடுமோ என்ற அச்சம் விவசாயிகள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

கடந்த 1984, 87, 89, 94, 99, 2002, 2008 ஆகிய ஆண்டுகளில் சராசரி மழையைவிட அதிகம் பெய்தது. மற்ற ஆண்டுகளில் சராசரியைவிட குறைந்த அளவே மழை பெய்தது. 94ம் ஆண்டு அக்டோபரில் வரலாறு காணாத அளவுக்கு மழை கொட்டித் தீர்த்தது. ஓராண்டின் சராசரி மழையளவே 630 மி.மீ., ஆனால், அம்மாதத்தில் மட்டும் 602 மி.மீ., மழை பெய்தது. இதனால், ஒரு வாரம் யாரும் வீட்டை விட்டு வெளியே செல்ல முடியாமல் முடங்கிக் கிடக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அந்தாண்டு பெய்த மொத்த மழையளவு 1006 மி.மீ., அதன்பின், அப்படியொரு மழைப் பொழிவு கிடைக்கவில்லை. தற்போது கோடை காலத்தைப்போல் கடும் வெயில் கொளுத்துவதால்

பயிர்கள் வாடி வருகின்றன. இன்னும் சில நாட்களில் பருவமழை துவங்கி விடும் என்று, வானிலை ஆய்வறிக்கை தெரிவித்திருப்பது நம்பிக்கை தருவதாக உள்ளது.

**கடன் வாங்கினால் உரம்: கூட்டுறவு வேளாண்மை வங்கியில் கட்டுப்பாடு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 26,2010,00:07 IST

குளித்தலை: கூட்டுறவு வேளாண்மை வங்கியில் கடன் பெற்றோருக்கு மட்டுமே உரம் என புதிய கட்டப்பாடு விதிக்கப்பட்டதால், விவசாயிகள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

குளித்தலை காவிரி டெல்டா பகுதியில் தற்போது நெல் நடவு பணி முடிந்துவிட்டது. நடவு முடிந்து 10 நாட்களுக்கு மேல், வயலில் களை அகற்றப்பட்டு கலப்பு உரம் போடுவது வழக்கம். குளித்தலை மற்றும் கிராமப்புற பகுதியில் உள்ள உரக்கடைகளில், கலப்பு உர மூட்டையில் செம்மண், மண், கோலமாவு கலந்து விற்பனை செய்யப்படுவதால் பலர் இங்கு உரம் வாங்குவது இல்லை. சிறு விவசாயிகள் மட்டும் வேறுவழியின்றி கலப்பு உரம் வாங்குகின்றனர்.

கூட்டுறவு வேளாண்மை வங்கியில் 50 கிலோ கொண்ட கலப்பு உரம் விற்பனை செய்யப்பட்டு வந்தது. கடந்த ஒரு வாரமாக வங்கியில் கலப்பு உரம் பற்றாக்குறையாக இருக்கிறது. கலப்பு உரம் தரமாகவும், மூட்டை 50 கிலோ விற்பனை செய்யப்படும் கூட்டுறவு வங்கி உரம் வரவு நிறுத்தப்பட்டுள்ளது. கூட்டுறவு வேளாண்மை வங்கியில் தற்போது பொட்டாஷ், யூரியா, டி.ஏ.பி., உரம் மூட்டைகள் இருப்புள்ளது. மருதூர், தண்ணீர்பள்ளி மற்றும் அருகே உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் கலப்பு உரம் இல்லாததால், விவசாயிகள் தினசரி இங்கு வந்து விசாரித்து செல்கின்றனர்.

"கலப்பு உரம் விரைவில் வரும்' என்று கூறியே அலுவலர்கள் சமாளிக்கின்றனர். இந்நிலையில், கடந்த சில நாட்களாக, கூட்டுறவு வேளாண்மை வங்கியில் கடன் பெற்றால் மட்டுமே உரம் வழங்கப்படும் என்று புதிய கட்டுப்பாட்டை விதிக்கின்றனர். கடன் பெறாத விவசாயிகள், இதனால் அதிர்ச்சியடைந்துள்ளனர். தொடக்க வேளாண்மை வங்கிகளுக்கு உரம் வழங்கும் வேளாண்மை துறை, இவ்வங்கிகளில் உரம் இருப்பு குறித்து கண்காணிக்க வேண்டும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

**ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலையத்தில் "க்ளைமாரைஸ்' திட்டப் பயிற்சி வழங்கல்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 26,2010,00:15 IST

கும்பகோணம்: கும்பகோணம் அருகே ஆடுதுறை தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையத்தில் நேற்று விவசாயிகளுக்கு "க்ளைமாரைஸ்' திட்டப் பயிற்சி வழங்கப்பட்டது. "க்ளைமாரைஸ்' திட்டம் நார்வே நாட்டின் வெளியுறவு துறையின் நிதியுதவி மூலம் கோவை வேளாண் பல்கலையிலுள்ள வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையத்தில் நடந்து வருகிறது. இத்திட்டத்தின் தொழில்நுட்பம் பரப்பும் மையமாக தமிழக நெல் ஆராய்ச்சி நிலையம் செயல்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் தஞ்சை மாவட்டத்தில் உள்ள திருவிடைமருதூர் யூனியன் திருபுவனம் கிராமம் மற்றும் திருப்பனந்தாள் யூனியன் மணலூர் கிராமமும் தேர்ந்தெடுக்கப்பட்டு காலநிலைத் தாக்கம் தொடர்பான வயல்வெளி ஆராய்ச்சி மற்றும் செயல்விளக்கம் நடந்து வருகிறது. இவ்விரு கிராமங்களை சேர்ந்த 60 விவசாயிகளுக்கு, "நீர் மற்றும் உரநிர்வாகம் மற்றும் உயிர் உரங்களின் பயன்பாடுகள்' என்ற தலைப்பில் திறன் ஊக்குவிப்பு திட்டப்பயிற்சி வழங்கப்பட்டது. தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலைய இயக்குனர் பயிற்சியை துவக்கி வைத்து, "உலகம் வெப்பமயமாதல், வேளாண்மையில் காலநிலை மாற்றத்தின் தாக்கம், அதனை தடுப்பதற்கான வழிமுறைகள்,' குறித்து விளக்கினார்.

உழவியல் துறை தலைவர் ரவி வரவேற்றார். க்ளைமாரைஸ் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து விளக்கமளித்தார். நெல் சாகுபடியில் தண்ணீர் மற்றும் ஊட்டச்சத்து உபயோகத்திறனை அதிகரிப்பதற்கான வழிமுறைகள் குறித்து உழவியல் துறையின் உதவிப்பேராசிரியர் ரமேஷ் பயிற்சி அளித்தார். உதவிப்பேராசிரியர் சுப்ரமணியன் நெல் சாகுபடியில் அசோலாவின் பயன் மற்றும் அசோலாவை மாட்டுத் தீவனமாக பயன்படுத்துதல் குறித்தும் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். திருவிடைமருதூர் உதவி வேளாண் இயக்குனர் உதயகுமார், திருப்பனந்தாள் உதவி வேளாண் இயக்குனர் முத்துக்கோரி ஆகியோர் பேசினர்.

**சொட்டு நீர் பாசனத்திற்கு ரூ. 2.44 கோடி மானியம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 26,2010,03:41 IST

மதுரை: மதுரை மாவட்டத்தில் 1600 எக்டேர் நிலத்தில் பல்வேறு பயிர்களுக்கு சொட்டுநீர் பாசனம் அமைக்கப்படும். விவசாயிகளுக்கு 2 கோடியே 44 லட்சம் ரூபாய் மானியம் வழங்கப்படும். ஒரு குடும்பத்திற்கு 5 எக்டேருக்கான மானியம் அனுமதிக்கப்படும்.திட்ட விண்ணப்பம், சிட்டா அடங்கல் நகல், எப்.எம்.பி.,வரைபடம், ரேஷன் கார்டு நகல், பாஸ்போர்ட்

போட்டோ மற்றும் மண், நீர் பரிசோதனை அறிக்கையுடன் விண்ணப்பிக்க வேண்டும். அரசு அங்கீகரித்துள்ள நுண்ணீர்ப் பாசன கம்பெனிகளை தேர்வு செய்து, வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனரை அணுக வேண்டும்.சொட்டு நீர் பாசனம் அமைக்கும் நிறுவனங்களின் மதிப்பீட்டை, உறுதி செய்த பின் விவசாயிகள் கையொப்பமிட வேண்டும். விவசாயிகளுக்கு 65 சதவீத மானியம் வழங்கப்படும். மீதி தொகையை வங்கிக் கடனாக பெறலாம். சொட்டு நீர் பாசனம் அமைக்கும் நிறுவனங்களுடன் ஆலோசனைக் கூட்டம் மதுரையில் கலெக்டர் காமராஜ் தலைமையில் நடந்தது. அவர்,"" தண்ணீர் பற்றாக்குறையை சமாளிக்க சிறந்த வழி சொட்டு நீர் பாசன முறை. இதை அமைக்கும் நிறுவனங்கள் வெளிப்படையாக செயல்பட வேண்டும்," என்றார்.

**விவசாயிகளுக்கு லாபம் தரும் விதைப் பண்ணை தொழில்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 26,2010,03:49 IST

மதுரை:தானியங்களை விற்பனை செய்வதற்கு பதிலாக, விதைப்பண்ணை அமைத்து, விதையாக விற்பனை செய்தால், விவசாயிகள் கூடுதல் லாபம் பெறலாம்.
நெல், கடலை, பாசிப்பயறு, உளுந்து, தட்டைப்பயறு, கம்பு போன்ற பயிர்களில் விதைப்பண்ணை அமைக்கலாம். இதற்கென அரசு சான்றளிக்கப்பட்ட, ஆதார விதைகளையே வாங்க வேண்டும். தனியாரிடமும் சான்றளிக்கப்பட்ட ஆதார விதைகளை வாங்கலாம்.

பதிவு செய்ய வேண்டும்: ஆதார விதைகளும், அவற்றைப் பெற்றதற்கான ரசீதும் இருந்தால், விதைச் சான்றளிப்புத் துறையை அணுகலாம். விதைகளை நட்ட 30 நாட்களுக்குள், அலுவலகத்தில் ரசீதை காண்பித்து, பதிவு செய்யலாம். பதிவு கட்டணம் 25 ரூபாய். ஒரு ஏக்கர் நெல்லுக்கு விதைச் சான்றளிக்க 60 ரூபாய் கட்டணம். பயிர்களைப் பொறுத்து இது மாறுபடும். இது தவிர, ஆய்வக கட்டணம் 30 ரூபாய். 50 சென்ட் இடத்திலும் விதைப்பண்ணை அமைக்கலாம். அதிகபட்சமாக 25 ஏக்கர் வரை பதிவு செய்யலாம்.பூத்து, காய்க்கும் பருவங்களில் அரசு அதிகாரிகள் நேரில் வந்து பயிரை ஆய்வு செய்வர்.

பருத்தி, கடலை, கம்பு பயிர்களுக்கு மூன்று முறை ஆய்வு செய்யப்படும். பூ வரும் போது தான், விதையின் தரத்தை முழுமையாக ஆய்வு செய்ய முடியும். சான்று பெற:%நெல்லை அறுவடை செய்த பின், அரசு விதை சுத்திகரிப்பு நிலையத்திற்கு அனுப்ப வேண்டும். மதுரையில் சோழவந்தான் மற்றும் மேலூர் விநாயகபுரத்தில் சுத்திகரிப்பு நிலையங்கள் உள்ளன. ஒரு டன் நெல்லை சுத்தம் செய்வதற்கு 400 ரூபாய் கட்டணம். 100 நெல் விதைகளில் 80 சதவீத விதைகள்

முளைப்புத் திறன் கொண்டதாகவும், ஈரப்பதம் 13 சதவீதமும், பிற விதையினங்கள் கலக்காத வகையில் 0.2 சதவீத தூய்மையுடன் விதைகள் இருந்தால், விதைச் சான்றளிக்கப்படுகிறது.விற்பனைக்கு அனுமதி: விதைச் சான்று பெற்றாலும், விற்பனை செய்வதற்கு அனுமதி பெற வேண்டும். இதற்கு விதை ஆய்வுத் துணை இயக்குனர் அலுவலகத்தில் 100ரூபாய் கட்டணம் செலுத்தி, பதிவு செய்ய வேண்டும். நெல்விதைகளை இருப்பு வைக்க, 100 சதுரஅடி இடம் வேண்டும். வீட்டிலேயே தனியறையாக இருந்தால் கூட போதும். விதைகளை அங்கே இருப்பு வைத்து, விற்பனை செய்யலாம்.

மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை மறுபதிவு செய்யவேண்டும்.விதைச் சான்றளிப்புத் துறை உதவி இயக்குனர் அருளரசு கூறுகையில், ""தானியங்களை விதையாக விற்பதன் மூலம் 30 சதவீத கூடுதல் லாபம் கிடைக்கும். அரசு சான்றளிக்கப்பட்ட விதைகளுக்கு, சந்தையில் நல்ல வரவேற்பு இருக்கிறது. எனவே விதைப்பண்ணை அமைக்க, விவசாயிகள் பதிவு செய்யலாம்," என்றார்.கூடுதல் தகவல்களுக்கு மதுரை தல்லாகுளத்தில் உள்ள அலுவலகத்தை 0452 - 253 2029 ல் தொடர்பு கொள்ளலாம்.

**விவசாய கடன் திட்டத்தில் கெடுபிடி வசூல்கோழி வளர்ப்பு உரிமையாளர்கள் பாதிப்பு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 26,2010,02:30 IST

திருநெல்வேலி:விவசாய கடன் திட்டத்தில் கெடுபிடி வசூல் செய்து வருவதால் நெல்லை மாவட்டத்தில் கோழி வளர்ப்பு உரிமையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.நெல்லை கலெக்டர் அலுவலகத்தில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடந்தது. இதில் மாவட்ட கோழி வளர்ப்பு உரிமையாளர்கள் பரமசிவன், கருப்பசாமி மற்றும் பலர் அளித்த மனுவில் தெரிவித்துள்ளதாவது:நாங்கள் விவசாய கடன் திட்டத்தின் கீழ் சுமார் 3 ஆண்டுகளுக்கு முன்பாக பாங்கில் கடன் பெற்று பண்ணை அமைத்துள்ளோம். வளர்ப்பு குஞ்சுகள் தரும் நிறுவனங்கள் எங்களை ஊக்குவிக்காத நிலையில் மிக குறைந்த அளவே ஊக்க தொகை கிடைக்கிறது.மேலும், இந்நிறுவனங்கள் சரி வர வளர்ப்பு குஞ்சுகளை வழங்காத சூழ்நிலையில் வறட்சி அதிகமாக காணப்படுவதால் போதிய வருமானம் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, பாங்க் மூலம் கெடுபிடி வசூல் செய்வதை நிறுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.இவ்வாறு அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மரபணு மாற்றுப் பயிர்களை அனுமதிக்கக் கூடாது : இந்திய சமூக செயல்பாட்டு பேரவை வலியுறுத்தல்**

அக்டோபர் 26,2010,00:00 IST

புதுச்சேரி : மரபணு மாற்று பயிர்களை புதுச்சேரியில் அனுமதிக்கக் கூடாது என்று இந்திய சமூக செயல்பாட்டு பேரவை கோரிக்கை வைத்துள்ளது. பேரவை மாநில அமைப்பாளர் மோகனசுந்தரம் வெளியிட்டுள்ள அறிக்கை: மரபணு மாற்று உணவு என்பது கிருமிகளான பாக்டீரியா, வைரஸ் மற்றும் பூச்சிகள் போன்றவற்றின் மரபணுக்களை எடுத்து அரிசி, சோளம் போன்ற தானியங்களிலும், கத்தரி, உருளை போன்ற காய்கறிகளிலும் திணிக்கப்பட்டு உருவானதாகும். மரபணு மாற்று பயிர்கள் உடல் நலத்திற்கு தீங்கு விளைவிக்கும், மண் வளத்தினை அழிக்கும், சுற்றுச்சூழல் மற்றும் விவசாயிகளின் வாழ்வுரிமையை பாதிக்கும்.

கடந்த 6 வருடங்களாக மரபணு மாற்று பி.டி. பருத்தியினால் விவசாயிகளுக்கு எந்த லாபத்தையும் தர முடியவில்லை என்பதற்கு ஆண்டுதோறும் பெருகி வரும் பருத்தி விவசாயிகளின் தற்கொலைகளே சாட்சி. ஆந்திரா, மத்தியப்பிரதேசம், அரியானா என்று பல்வேறு இடங்களில் ஆயிரக்கணக்கில் கால்நடைகள் இறந்து போனதற்கும் பி.டி. பருத்தியே காரணம் என கால்நடை மருத்துவர்கள், அறிஞர்கள் கூறுகின்றனர்.

இத்தகைய ஆபத்தான மரபணு மாற்றுத் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி அரிசி, கோதுமை, சோளம், கேழ்வரகு, கம்பு, உளுந்து, துவரம்பருப்பு, கத்தரிக்காய், வெண்டைக்காய், தக்காளி, காலிபிளவர், முட்டைக் கோஸ், பப்பாளி போன்று 41க்கும் மேலான உணவுப்பொருட்களில் 170ம் மேலான மரபணு மாற்று ரகங்கள் கொண்டுவரப்பட இருக்கின்றன.

தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரா, கேரளா ஆகிய மாநிலங்களில் மரபணு மாற்றுப் பயிர்களையும், உணவுப் பொருட்களையும் அனுமதிக்க மாட்டோம் என அம்மாநில அரசுகள் கொள்கை முடிவெடுத்து ஆணை வெளியிட்டுள்ளன. அதே போல் மரபணு மாற்று பயிர்களை அனுமதிக்க மாட்டோம் என்று புதுச்சேரி அரசும் ஆணை வெளியிட வேண்டும். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**மக்காச்சோளம் செயல் விளக்க திடல்கள்: வேளாண் இயக்குனர் வேண்டுகோள்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 25,2010,22:38 IST

பண்ருட்டி : நீர்வள நிலவளத் திட் டத்தின் கீழ் கெடிலம் நீர் வடிமுகடு பகுதியில் மக் காச்சோளம் செயல் விளக்க திடல்கள் அமைத் திட உதவி வேளாண்மை இயக்குனர் அரிதாஸ் விவசாயிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: மக்காச்சோளம் சாகுபடியை பண்ருட்டி பகுதியில் ஊக்கப்படுத்திட நீர் வள நிலவளத் திட்டம் மூலம் பாசன நீரை சிக்கனமாக திறம்பட செயல்படுத்த செயல் விளக்க திடல்கள் அமைக்கப்படவுள்ளது. மக்காச்சோளம் நெல்லுடன் ஒப்பிடும்போது நெல்லுக்கு ஒருபோக சாகுபடிக்கு 25 முறை நீர்பாசனம் செய்ய வேண்டும். ஆனால் மக்காச்சோளத் திற்கு 10 முறை பாசனம் செய்தால் போதும். நெல் ஒரு ஏக்கர் சாகுபடி செய்யும் நீரைக் கொண்டு இரு ஏக்கரில் மக்காச்சோளம் சாகுபடி செய்யலாம்.

மக்காச் சோளம் உமியில்லாத உணவு தானியம் உற்பத்தியாவது முழுவதும் உணவாக பயன்படுத்தலாம். நெல் ஒரு குவிண்டால் உற்பத்தி செய்தால் 65 சதவீதம் மூன்றில் இரு பங்கு அரிசியாக கிடைக்கிறது. மக்காச்சோளம் ஒரு செடிக்கு ஒரு திடமான கதிரினை தரும். பிற தானிய பயிர்கள் போல் அன்று சோளக்கதிரினை அறுவடை செய்தால் போதும். மக்காச்சோளத்தினை பல் வேறு உணவு பொருளாக தயாரித்து நாம் உணவாக உண்கிறோம்.

மக்காச்சோளம் கோழித் தீவனம் தயாரித்திட அதி கம் தேவைப்படுகிறது. கோழிகளுக்குத் தீவனமாகி அசைவம் உண்போருக்கு கோழிக்கறியாக புர தம் செறிந்த உணவாக கிடைக்கிறது. எக்டருக்கு இரண்டரை டன்னுக்கு மேல் மகசூல் தரவல்லது. இதனை தனி, ஊடு, கலப்பு, மற்றும் வரப்பு ஓர பயிராகவும் பயிரிடலாம்.

பாசன நீரின் சிக்கன உபயோகத்திற்கு மக்காச் சோளம் சாகுபடியினை பரவலாக்கும் சாலையோரங்களில் செயல்விளக்க திடல்கள் கெடிலம் நீர் வடிமுகடு பகுதியில் அமைக் கப்படவுள்ளது. தகுதியான விவசாய முன்னோடிகள் வேளாண் துறை அலுவலர்களை அணுகி பயன் பெறலாம். இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**விவசாயிகளுக்கு இலவச உரம் வழங்கும் விழா**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 25,2010,22:05 IST

உளுந்தூர்பேட்டை : புல்லூர் கிராமத்தில் வேளாண்துறை சார்பில் இலவச உரம் வழங்கும் விழா நடந்தது.

உளுந்தூர்பேட்டை அடுத்த புல்லூர் கிராமத்தில் தேசிய உணவு பாதுகாப்பு இயக்கத்தின் கீழ் துரிதப்படுத்தப்பட்ட பயறு பெருக்கு திட்டத் தில் இலவச உரம் வழங் கும் விழா நடந்தது. வேளாண்மை உதவி இயக்குனர் தெய்வநீதி வரவேற்றார். வேளாண்மை இணை இயக்குனர் ராமகிருஷ் ணன் தலைமை தாங்கி விவசாயிகளுக்கு இலவச உரம் வழங்கினார். வேளாண்மை அலுவலர் சுப்ரமணியன், உதவி இயக்குனர் ரவீந்திரன் திட்டம் குறித்து விளக்கி பேசினர். உதவி விரிவாக்க அலுவலர்கள் காமராஜ், அண்ணாதுரை, ராஜக் கண்ணு, அந்தோணிசாமி, மாயவன் உட்பட பலர் கலந்துக்கொண்டனர்.

**உதவி வேளாண்மை அலுவலர்கள் விழுப்புரத்தில் ஆலோசனை கூட்டம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 25,2010,22:05 IST

விழுப்புரம் : தமிழ்நாடு உதவி வேளாண்மை அலுவலர்கள் சங்கத்தின் மாநாட்டு விளக்க கூட்டம் விழுப்புரத்தில் நடந்தது.

கூட்டத்திற்கு மாவட்ட தலைவர் பிரசன்னராஜ் தலைமை தாங்கினார். மாநில அமைப்பு செயலாளர் முத்து, துணை செயலாளர் பாலுசாமி சிறப்புரையாற்றினர். உதவி வேளாண்மை அலுவலர் சங்கத்தின் புதிய மாவட்ட நிர்வாகிகளை தேர்வு செய்வது, சென்னையில் நவ., 24ம் தேதி நடை பெறும் வேளாண்மை அலுவலர் சங்க மாநாட்டில் அதிகளவில் கலந்து கொள்வது, வேளாண்மை அலுவலர்களுக்கு பல்வேறு சலுகைகளை வழங்கிய முதல்வர் மற்றும் துணை முதல்வருக்கு நன்றி தெரிவித்தல் உள்ளிட்ட தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

**முருங்கை விலை கிடுகிடுஅரை சதமடித்து ஆட்டம்**


பதிவு செய்த நாள் : அக்டோபர் 25,2010,02:35 IST

கோயம்பேடு:கோயம்பேடு மார்க்கெட்டில் முருங்கைக்காய் விலை கிலோ ஒன்று 50 ரூபாயாக உயர்ந்துள்ளதால், சில்லரை வியாபாரிகளும், பொதுமக்களும் மற்ற காய்கறிகளை வாங்க ஆர்வம் காட்டுகின்றனர்.தமிழகத்தில் கரூர், பழனி, ஒட்டன்சத்திரம் உள்ளிட்ட பல பகுதிகளில் இருந்தும், ஆந்திர மாநிலத்தில் இருந்தும் அதிகளவில் முருங்கைக்காய் வரத்து இருக்கிறது. தற்போது அப்பகுதியில் உற்பத்தி குறைந்ததால் கோயம்பேடு மார்க்கெட்டிற்கு முருங்கைக்காய் வரத்து கணிசமாக குறைந்துள்ளது.இதனால், அதன் விலை கடந்த சில வாரங்களாக மொத்த விலையில் கிலோ ஒன்றுக்கு 25 முதல் 35 ரூபாய் வரை அதிரடியாக உயர்ந்தது.

இந்நிலையில், தற்போது குஜராத் மாநிலத்தில் இருந்து முருங்கைக்காய் கொண்டு வரப்படுகிறது. கோயம்பேடு மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி கிலோ ஒன்றுக்கு 50 ரூபாய் என விற்கப்பட்டது. சமையலில் அதிகம் பயன்படுத்தப்படும் முருங்கைக்காய் விலை உயர்வால் அதை சில்லரை வியாபாரிகளும், பொதுமக்களும் தவிர்த்து வருகின்றனர்.இதே போல, பெல்லாரி வெங்காயம் விலையும் உயரத் துவங்கியுள்ளது. அதிக நாள் கெடாமல் இருக்கும் மகாராஷ்டிரா மாநில பெல்லாரி வெங்காயம் கிலோ ஒன்றுக்கு 25 ரூபாய் வரையும், கர்நாடகா மாநிலத்தில் பெறப்படும் வெங்காயம் கிலோ ஒன்று 20 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

# தேவைப்பாட்டுக்கு இணையாக உற்பத்தி இல்லாததால் பருப்பு சாகுபடிக்காக, ஆப்பிரிக்காவில் நிலங்களை வாங்க மத்திய அரசு ஆதரவு



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

பருப்பு வகைகள் பயிரிடுவதற்காக, ஆப்பிரிக்காவில் விளைநிலங்களை வாங்கும் முயற்சியில் ஈடுபட்டு வரும் இந்திய நிறுவனங்களுக்கு ஆதரவு அளிக்கப்படும் என மத்திய அரசு உறுதியளித்துள்ளது.

அடுத்த 10 ஆண்டுகளில்...

கடந்த பல ஆண்டுகளாக நம் நாட்டில் பருப்பு வகைகள் உற்பத்தியை அதிகரிப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனினும் எதிர்பார்த்த அளவிற்கு உற்பத்தி அதிகரிக்கவில்லை. இந்நிலையில் உள்நாட்டு தேவையை ஈடு செய்ய

வேண்டுமானால், குறைந்தபட்சம் அடுத்த பத்து ஆண்டுகளுக்கு பல்வேறு பருப்பு வகைகளை அதிக அளவில் இறக்குமதி செய்ய வேண்டியிருக்கும் என்று கூறப்படுகிறது. பத்து ஆண்டுகளில் நம் நாட்டில் பருப்பு வகைகளுக்கான தேவைப்பாடு ஆண்டுக்கு 2.38 கோடி டன்னாக அதிகரிக்கும் என அரசு மதிப்பீடுகள் தெரிவித்துள்ளன.

நடப்பு 11–வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் பருப்பு வகைகள் உற்பத்தியை 20 லட்சம் டன் உயர்த்த மத்திய அரசு இலக்கு நிர்ணயம் செய்துள்ளது. இந்த இலக்கை அடையும் வகையில் ஒரு ஹெக்டேர் வாயிலான உற்பத்தியை தற்போதைய 600 கிலோவிலிருந்து 800 கிலோவாக உயர்த்த திட்டமிட்டுள்ளது.

அதிக நிதி ஒதுக்கீடு

கடந்த 2007–08–ஆம் நிதி ஆண்டில் மத்திய அரசு, பருப்பு வகைகள் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்களுக்காக ரூ.106 கோடி ஒதுக்கியது. இதனை நடப்பு நிதி ஆண்டில், 8 மடங்கு அதிகரித்து, ரூ.837 கோடியாக உயர்த்தியுள்ளது. கடந்த நான்கு ஆண்டுகளில் பருப்பு வகைகள் உற்பத்தி மேம்பாட்டுக்காக மொத்தம் ரூ.1,806 கோடியை அரசு ஒதுக்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

நம் நாடு ஆண்டுதோறும் சராசரியாக 20 முதல் 30 லட்சம் டன் வரை பருப்பு வகைகளை இறக்குமதி செய்து வருகிறது. நடப்பு நிதி ஆண்டில் பருப்பு வகைகள் உற்பத்தி 1.57 கோடி டன்னாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் தேவைப்பாடு 1.99 கோடி டன்னாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே, நம் நாடு 42 லட்சம் டன் பருப்பு வகைகளை இறக்குமதி செய்ய வேண்டிய நிலை உள்ளது.

இறக்குமதியில் முன்னிலை

இந்தியா பருப்பு இறக்குமதியில் முன்னிலை வகித்து வருவதால், இந்திய நிறுவனங்களுக்கு ஆப்பிரிக்கா அதன் பரந்து விரிந்த நிலப்பரப்பினை பருப்பு சாகுபடிக்கு பயன்படுத்திக் கொள்ளுமாறு ஏற்கனவே அழைப்பு விடுத்துள்ளது. எனவே அங்கு விளைநிலங்களை கையகப்படுத்துவது சிறந்த திட்டம் என்று கருதப்படுகிறது. நீண்ட கால அடிப்படையில் இரண்டு நாடுகளுக்குமே உணவுப் பாதுகாப்பு என்பது ஒரு மிக முக்கியமான அம்சமாக இருக்கும். எனவே அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம் என ஃபிக்கி தலைவர் ராஜன் பார்தி மிட்டல் தெரிவித்தார். பல இந்திய நிறுவனங்கள் ஏற்கனவே வெளிநாடுகளில் வேளாண் விளைநிலங்களை கையகப்படுத்துதவற்கான நடவடிக்கைகளில் இறங்கியுள்ளன. இந்நிலையில் மத்திய அரசின் ஆதரவு நிறுவனங்களின் முயற்சிக்கு பெரும் ஊக்கமளிக்கும் என அரசு அதிகாரிகள் தெரிவித்தனர்.